மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட * என்ற பகுதிகளையெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்க உத்தரவிடுகிறேன். கேள்விதான் கேட்க வேண்டும். கேள்வியிலே எவ்வளவு வேண்டுமானாலும் பதில் பெறுகிற அளவிற்குக் கேட்கலாம். நீங்கள் கற்பனையில் * என்றெல்லாம் கேட்கக் கூடாது. நான் குறிப்பிட்டது உட்பட நீக்க உத்தரவிடுகிறேன்.

(ஓ) தஞ்சை மாவட்டம் வெங்காரமாவடி கிராமத்தில் சத்துணவுக் கூடம் அமைத்தல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருவாளர்கள் வி. பி. சிந்தன், கு. ரமணி, கோ. வீரய்யன், எம். செல்லமுத்து, ஜே. ஹேமச்சந்திரன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. எம். செல்லமுத்து: துணைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம், கீழ்வேளூர் ஊராட்சி ஒன்றியம், வடகரை ஊராட்சி, வெங்காரமாவடி கிராமத்தில் துவங்கப்பட்ட ஆதி திராவிட நலப் பள்ளியில் சத்துணவுக் கூடம் ஏற்படுத்தாமல் இருப்பதால் 60-க்கும் மேற்பட்ட மாணவர்கள் பாதிக்கப்படுவது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை

தஞ்சாவூர் மாவட்டம், கீழ்வேளூர் ஊராட்சி ஒன்றியம், வெங்காரமாவடி கிராமத்தில் புதிய பள்ளி துவங்க வேண்டிய அவசி

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1987 ஏப்ரல் 29]

யத்தை முன்னிட்டும், அவசரத்தை முன்னிட்டும், அரசின் அனுமதி பெறப்படாமல் பள்ளிக் கல்வி இயக்குநரின் அனுமதியை மட்டும் ஏற்று, 30—6—1986 முதல் ஒரு புதிய ஆதி திராவிடர் நல ஆரம்பப் பள்ளி துவங்கப்பட்டு தனியார் அளித்துள்ள ஓட்டு வீட்டில் நடைபெற்று வருகிறது. அரசின் அனுமதியை எதிர் நோக்கி இப்பள்ளியில் முதலமைச்சரின் சத்துணவுத் திட்டம் உடனே செயல்படுவதற்கான அனுமதியை ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் தற்போது வழங்கியுள்ளார்.

திரு. எம். செல்லமுத்து: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற அறிக்கையில் பள்ளி 30—6—1986-ல் அரசினுடைய அனுமதி எதிர்பார்த்து, பள்ளிக் கல்வி இயக்குநரின் அனுமதியோடு துவங்கப்பட்டு விட்டதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்குப் பின்னாலே ஒன்பது மாதம் கழித்து சத்துணவுக் கூடமும் துவங்கப் பட்டுவிட்டதாகக் கூறியிருக்கிறார்கள். இந்தக் கோரிக்கை அந்தப் பகுதி மக்களின் நீண்டகால கோரிக்கையாகும். இந்தக் கோரிக்கையை நிறைவேற்றி இருப்பதற்கு அரசிற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது கொடுத்திருக்கிற அறிக்கையில் வாடகைக் கட்டடத்தில் இரண்டும் இயங்குவதாகச் சொல்லி யிருக்கிறார்கள். அந்தப் பள்ளியும் சத்துணவு மையமும் சொந்தக் கட்டடத்தில், அரசுக் கட்டடத்தில் இயங்குவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா? அப்படி அமைக்கப் பட்ட அந்த சத்துணவுக் கூடத்தை, பள்ளிக் கட்டடத்தை அமைச்சர் அவர்களே திறந்து வைக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: துணைத் தலைவர் அவர்களே, ஆக்கப் பொறுத்தவர்கள் ஆறப் பொறுக்க வேண்டும். நீண்டகாலமாக பள்ளி வேண்டுமென்று கேட்டு இப்போது தான் கிடைத்திருக்கிறது. அதிலே சத்துணவுக் கூடமும் கிடைத்திருக் கிறது. சொந்தக் கட்டடம் வேண்டுமென்று மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் ஆசைப்படுகிறார்கள். படிப்படியாக அந்த வாய்ப்பை அந்தப் பள்ளிபெறும்.